# மலேசிய கிறிஸ்தவ சம்மேளனம் (சி.எஃப்.எம்)

(PPM-003-10-14011986)

***முகவரி:* 26 Jalan Universiti, 46200 Petaling Jaya, Selangor Darul Ehsan, Malaysia**

***தொலைபேசி / தொலைநகல்* : + 60 3 7957 1457**

**Email:** *cfmsia@yahoo.co.uk*

24 ஆகஸ்ட் 2018

## சி.எஃப்.எம். சுதந்திர தின 2018 மலேசிய தின செய்தி

## ஒரு புதிய மலேசியா, ஒரு புதிய நம்பிக்கை

1957ல் நாடு சுதந்திரம் அடைந்தது. 1963ல் மலேசியா தோற்றுவிக்கப்பட்டது. அதுமுதற்கொண்டு 14ஆவது பொதுத்தேர்தலுக்குப்பிறகு இவ்வருடம் இவைகளின் கொண்டாட்டம் புதியதோர் திருப்புமுனையை நோக்கிச்செல்கிறது.

முதலாவது நாடாக ஸ்தாபிக்கப்பட்டபொழுது ஓர் ஒற்றுமை நாடாக நமது முன்னாள் தலைவர்கள் காணவிரும்பியது இன்றைக்கு நிறைவேறுவதை உணரமுடிகிறது. சுபீட்சம், சாமாதானம், வாய்ப்புகள், சம அளவு, செழிப்பு ஆகியவற்றை அனுபவிக்கும் எதிர்பார்ப்பும் இன்று காணப்படுகிறது.

எனெவே இந்த கொண்டாட்ட அனுசரிப்பு நன்றியறிதலுடனும் மனமகிழ்வுடனும் சாமாதானமான புதிய அரசாங்க மாற்றம் அமைவதாக இருக்கட்டும். இந்த தேசத்தின் மீது தேவனுடைய இரக்கம், ஆசீர்வாதம், புதிய நம்பிக்கையுடன் செயல்படுவதற்காக நமது நன்றி துதிகளை அவருக்கு செலுத்துவோமாக.

நமது பிதமர், துணைப்பிரதமர், அமைச்சரவை உறுப்பினர்கள், மாநில முதல்வர்கள் ஆகியோருக்கு ஜெபம் ஏறெடுக்கக் கேட்டுக்கொள்கிறது. நமது தேசத்தை நேர்மை, உத்தமம், தாழ்மை, பட்சம், ஞானம், தெளிவு, நியாயம், நீதி, மற்றும் மறைமுகமின்றி நன்முறையில் ஆட்சி செய்ய அவர்களுக்கு நல்ல ஆரோக்கியம், பெலன் தேவன் அருளும்படி சி.எஃப்.எம். மன்றாட ஊக்குவிக்கிறது.

புதிய நம்பிக்கக் கூட்டணி அரசாங்கமும் தனது வாக்குறுதிகளில் மக்களின் நலன்காக்க அவற்றை நிறைவேற்றுவதை எதிர்க்கட்சியினரும் சரிபார்த்துக்கொள்ளவும் இரண்டு பலம்கொண்ட கட்சியாக எழும்பி தேசத்தை கட்டியெழுப்பவும் ஜெபிப்போம்.

பாவமும் ஊழலும் எந்த ஒரு தேசத்தையும் கீழேத் தள்ளும் என்பது அறிந்த ஒன்று.

*(நீதி ஜனத்தைஉயர்த்தும்: பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி நீதி 14:34).*

எல்லா நிலைகளிலும் ஊழலைமேற்கொள்ள புதிய சட்டங்களும், கொள்கைகளும், அமுலாக்கங்களும் நடைமுறைப்படுத்த அரசாங்கத்தைக்கேட்டுக்கொள்கிறோம். குற்றஞ்செய்தவர்கள்___தண்டிக்கபடுவது அவசியம் ஆனால் முன்னாள் அரசாங்கத்தின் ஆதரவாளர்களை அரசியல் பழிதீர்க்கும் படலத்தை மேற்கொள்ளாமல் நீதி நியாயத்துடன் விசாரிப்பது அவசியம்.அரசாங்கம் மாற்றம் நடைபெற்றவுடன் மலேசியா இன்னும் முதிர்ச்சிக்குள்ளும் ஜனநாயகத்திற்குள்ளும் கடந்து செல்ல வேண்டியதேயல்லாமல் அச்சுறுத்தும் பதிலடிகளுக்குச்செல்லக்கூடாது.

நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் நிலை மோசமாகுவதிலிருந்து காப்பாற்ற பொருள் சேவை வரியை அகற்றுவதை வரவேற்றாலும், அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்த முயற்சிகள் எடுக்க வேண்டும். பெரும் பண சுமையை ஏற்படுத்தும் பெரிய திட்டங்கள் ரத்து செய்வது மனமகிழ்ச்சி அளித்தாலும், எல்லா இன மக்களின் ஏழ்மையை அகற்றும் கொள்கைகள் தீட்டப்படவேண்டும். எல்லா இனமும் குறிப்பாக பூர்வீக குடியினரின் ஏழ்மையையும் நகர்ப்புறத்தில் வாழும் ஏழைகளின் அவலநிலையையும் முற்றிலுமாக துடைத்தொழிக்கும்பொருட்டும் பணக்காரர் பரம ஏழை எனும் பாகுபாடு நீங்கும்பொருட்டு நியாயமான பொருளாதார மேம்பாட்டுத்திட்டங்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

தேசத்தின் மேம்பாட்டுத்திட்டங்களுக்கு நாம் யாவரும் கைகளை இணைப்போம். உண்மையான உருமாற்றங்கள் இடம்பெற நிறைய காரியங்கள் செய்யப்படவேண்டும். எனவே நமக்குள் காணப்படுகிற எல்லா வேற்றுமைகளையும் வாய்ச்சவடால்களையும் அகற்றுவோம். நமது தேசத்தில் சாமாதானம், சுபீட்சம், செழிப்பு மேலோங்க புதிய உற்சாகத்துடன் உண்மையான மலேசியனாக ஒருவரையொருவர் மதித்து நமது மனதை புதுப்பித்துக்கொள்வோம்.

நமது தேசத்தை நாம் மதித்து இந்த வருட சுதந்திர தினத்தை மனமகிழ்ச்சியுடன் கொடிகளை வீடுகளிலும், பணிமனைகளிலும், சமய மையங்களிலும் பறக்கவிட்டு நமது ஆதரவை புலப்படுத்துவோமாக.

எல்லா மலேசியருக்கும் : நமது மலேசியாவை நேசிப்போம்.
சுதந்திர நாள் மற்றும் மலேசிய நாள் நல்வாழ்த்துகள்.

இக்கண்

ஆர்ச்பிஷப் ஜூலியன் லெயோவ் பெங் கிம்
தலைவர்

ஆர்ச்பிஷப் டாக்டர் சைமன் போஹ் ஹூன் செங்
உதவித்தலைவர்

பிஷப் டாக்டர் ஓங் ஹுவாய் தெய்க்
உதவித்தலைவர்

அருட்திரு டாக்டர் இயூ ஹொங் செங்
உதவித்தலைவர்